செ.வெ.எண்:24/2017 நாள்:14.04.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிஜித்தான் மேளாவின் 100வது நாள் நிறைவு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் மின்னனு பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் விதமாக டிஜித்தான் மேளாவின் 100வது நாள் நிறைவு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில், வியாபாரிகளுக்கு மின்னனு பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு பாயிண்ட் ஆப் சேல் கருவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள். மேலும், இவ்விழாவில் நாக்பூரில் பாரத பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, முன்னோடி வங்கி மேலாளர் திரு.வினோத்குமார், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு.அசோக்குமார், தேசிய தகவல் மைய அலுவலர் திரு.இராமகிருஷ்ணன், நிதிசார் கல்வி ஆலோசகர்கள் திரு.கோவிந்தராஜன், திரு.இராமசாமி, திரு.பிச்சைமணி மற்றும் அனைத்து வங்கிகளின் வங்கித் தொடர்பாளர்கள், மகளிர் திட்ட, புதுவாழ்வு திட்ட களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.